# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1905/38 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1905/38 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**இறப்பர் ஏற்றுமதித் தொழில்**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்பயனைக் கொண்டு, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள் முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்டுள்ள உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 10.

**அட்டவணை**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம்

வேறுபடுத்தப்பட்டவையும் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மூலம் வெளியிடப்பட்டு கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அட்டவணையின் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

## *பகுதி II*

மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

**தொழிலாளர் வகுப்பு** :

**தரம் II** :

வெட்டுதலும், பூசனம் பிடித்த இறப்பரைக் கழுவுதலும் அதற்குப் புகையிடுதலும், அமர்த்து பொறிகளுக்கும் நிறுக்கும் எந்திரங்களுக்கும் களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தள்ளுதல் உட்பட பொது வேலை, சிப்பமாக்குவதற்கு இறப்பரை ஒன்று சேர்த்தலும், சுற்றுதலும், அமர்த்துதலும், வளையமிடுதலும், கம்பிகட்டுதலும், கடைச்சணற் சாக்கு உறைகள் வெட்டுதல், வர்ணப்பசை பூசுதலும் காயவைத்தலும், ஒன்று சேர்த்தலும், அடையாளமிடுதலும், விசேடமாகப் பொறியிடுவதற்கு கடைச்சணற் சாக்கைப் பரவிவிடுதல், சிப்பங்களை கடைச்சணற் சாக்கினால் மூடுதலும் வைத்தலும், சிப்பங்களை ஆயத்தம் செய்தலும் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும்.

**இடைநிலைத் தரம்** :

நிறுத்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்தல் தொழிலிலீடுபடுத்தப்பட்டுள்ள அமர்த்து பொறி இயக்குநரின் வேலை.

தரம் I :

சிப்பங்களை ஏற்றுதல், தரையிறக்குதல் அத்துடன் கொண்டு செல்லல், அடுக்குதல் மற்றும் தரப்படுத்துதலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்

காவலாளர்கள் :

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | இடைநிலைத் தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | காவலாளர்கள்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,212.50 | 11,700.00 | 12,187.50 | 11,212.50 |
| 2 ஆம் ஆண்டு | 11,312.50 | 11,825.00 | 12,337.50 | 11,312.50 |
| 3 ஆம் ஆண்டு | 11,412.50 | 11,950.00 | 12,487.50 | 11,412.50 |
| 4 ஆம் ஆண்டு | 11,512.50 | 12,075.00 | 12,637.50 | 11,512.50 |
| 5 ஆம் ஆண்டு | 11,612.50 | 12,200.00 | 12,787.50 | 11,612.50 |
| 6 ஆம் ஆண்டு | 11,712.50 | 12,325.00 | 12,937.50 | 11,712.50 |
| 7 ஆம் ஆண்டு | 11,812.50 | 12,450.00 | 13,087.50 | 11,812.50 |
| 8 ஆம் ஆண்டு | 11,912.50 | 12,575.00 | 13,237.50 | 11,912.50 |
| 9 ஆம் ஆண்டு | 12,012.50 | 12,700.00 | 13,387.50 | 12,012.50 |
| 10 ஆம் ஆண்டு | 12,112.50 | 12,825.00 | 13,537.50 | 12,112.50 |
| 11 ஆம் ஆண்டு | 12,212.50 | 12,950.00 | 13,687.50 | 12,212.50 |
| 12 ஆம் ஆண்டு | 12,312.50 | 13,075.00 | 13,837.50 | 12,312.50 |
| 13 ஆம் ஆண்டு | 12,412.50 | 13,200.00 | 13,987.50 | 12,412.50 |
| 14 ஆம் ஆண்டு | 12,512.50 | 13,325.00 | 14,137.50 | 12,512.50 |
| 15 ஆம் ஆண்டு | 12,612.50 | 13,450.00 | 14,287.50 | 12,612.50 |

3- 880/1

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது ( 136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 10.

### அட்டவணை

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1978, ஓகத்து மாதம் 11 ஆந் திகதிய 330 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு , காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், கடைசியாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்களின் பகுதி II ற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) **தொழிற்பாட்டு ஆளணியினர்** : பாதுகாப்பு அலுவலர், பாதுகாப்பு காவலர், காவலாளர்கள், "பெட்ரல்மன்" அல்லது எப்பெயர் கொண்டாயினும் அழைக்கப்படும் ஊழியர்கள்.

(ஆ) **மேற்பார்வை ஆளணியினர்** : தொழிற்பாட்டு ஆளணியினருக்குப் பொறுப்பாக உள்ள ஊழியர்கள், பொறுப்பு அலுவலர்கள், மாற்று நேர மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள்.

மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

| ஊழியர் ஆண்டு | தொழிற்பாட்டு ஆளணியினர் ரூ. ச | மேற்பார்வை ஆளணியினர் ரூ. ச |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,320.00 | 11,940.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,420.00 | 12,090.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,520.00 | 12,240.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,620.00 | 12,390.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,720.00 | 12,540.00 |
| 6 ஆம் ஆண்டு | 11,820.00 | 12,690.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,920.00 | 12,840.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,020.00 | 12,990.00 |
| 9 ஆம் ஆண்டு | 12,120.00 | 13,140.00 |
| 10 ஆம் ஆண்டு | 12,220.00 | 13,290.00 |
| 11 ஆம் ஆண்டு | 12,320.00 | 13,440.00 |
| 12 ஆம் ஆண்டு | 12,420.00 | 13,590.00 |
| 13 ஆம் ஆண்டு | 12,520.00 | 13,740.00 |
| 14 ஆம் ஆண்டு | 12,620.00 | 13,890.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்*

| ஊழியர் ஆண்டு | தொழிற்பாட்டு ஆளணியினர் ரூ. ச | மேற்பார்வை ஆளணியினர் ரூ. ச |
|---|---|---|
| 15 ஆம் ஆண்டு | 12,720.00 | 14,040.00 |
| 16 ஆம் ஆண்டு | 12,820.00 | 14,190.00 |
| 17 ஆம் ஆண்டு | 12,920.00 | 14,340.00 |
| 18 ஆம் ஆண்டு | 13,020.00 | 14,490.00 |
| 19 ஆம் ஆண்டு | 13,120.00 | 14,640.00 |
| 20 ஆம் ஆண்டு | 13,220.00 | 14,790.00 |
| 21 ஆம் ஆண்டு | 13,320.00 | 14,940.00 |
| 22 ஆம் ஆண்டு | 13,420.00 | 15,090.00 |
| 23 ஆம் ஆண்டு | 13,520.00 | 15,240.00 |
| 24 ஆம் ஆண்டு | 13,620.00 | 15,390.00 |
| 25 ஆம் ஆண்டு | 13,720.00 | 15,540.00 |
| 26 ஆம் ஆண்டு | 13,820.00 | 15,690.00 |

3- 880/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**செங்கல், ஓடு உற்பத்தித் தொழில்**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இவ்வறிவித்தலுக்கான அவ்வட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 10.

**அட்டவணை**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1961 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 25 ஆந் திகதிய 12617 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தல், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் .-

## II ஆம் பாகம்

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பள அளவும் ஆகக்குறைந்த மாதச் சம்பள அளவும் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும் :-

**வேலையாளர் வகுப்பு :**

தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள், தரம் I :

பதிப்பு இயந்திரத்திற்கு களிமண் ஊட்டுநர் (இயந்திரம்), சூளையில் (சூட்டடுப்பில்) வேலைபார்க்கும் தீவைப்போர்

**தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II :**

பதிப்பு இயந்திரத்திற்கு ஊட்டுவோர் (கையால்), களிமண் ஓடுகளை சுடுவதற்காகச் சூளையில் ஏற்றுவதில் அல்லது அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் /தரம் பிரிப்போர்

**ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் :**

உருளை வேலையாளர், மொத்த உருவெட்டுநர், ஓட்டுத் தகட்டுக்கு எண்ணெய் பூசுவோர், அத்துடன் மெருகூட்டுவோர், நறுக்குவோர், காயாத ஓடுகளை தரம்பிரிப்போர், வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்காக ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

**தேர்ச்சியற்றவேலையாளர்கள் :**

களிமண் கலப்பதிலும் பதமாக்குவதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், இழுவண்டியில் நிரப்புவோர், களிமண் வேலையாட்கள், மொத்த உருகாவுவோர், இயந்திர மூலமாகக் கலப்பதிலும் நீர்சேர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அடுக்கு வரிசை அமைப்புக்களில் ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், ஓடுகளை காயவைப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள் காயாத ஓடுகள் தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், விறகு காவுவோர் நீர்விட்டுக் குழைக்கும் இயந்திரம் ஓட்டுநர், உலையிலிருந்து சுட்ட ஓடுகளை அகற்றுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அமுக்கு இயந்திரங்களுக்கு அல்லது களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கு களிமண் தொகுதிகளை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், சுடுவதற்காகச் சூளைகளுக்குள் ஓடுகளை ஏற்றுவதிலும் அடுக்குவதிலும் ஈடுபட்டுள்ள உதவியாளர்கள்.

**சாதாரண வேலை நாளொன்றிற்கான சம்பள வீதங்கள்**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| வேலையாளர் வகுப்பு | *ரூ. ச.* |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் I | *452.50* |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II | *430.00* |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் | *405.00* |
| தேர்ச்சி யற்ற வேலையாளர்கள் | *380.00* |

மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

| வேலையாளர் வகுப்பு | *1 ஆம் ஆண்டு ரூ. ச.* | *2 ஆம் ஆண்டு ரூ. ச.* | *3 ஆம் ஆண்டு ரூ. ச.* | *4 ஆம் ஆண்டு ரூ. ச.* | *5 ஆம் ஆண்டு ரூ. ச.* |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I | *11,312.50* | *11,487.50* | *11.662.50* | *11,837.50* | *12,012.50* |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II | *10,750.00* | *10,900.00* | *11,050.00* | *11,200.00* | *11,350.00* |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் | *10,125.00* | *10,250.00* | *10,375.00* | *10,500.00* | *10,625.00* |
| தேர்ச்சிபெறா வேலையாளர்கள் | *9,500.00* | *9,600.00* | *9,700.00* | *9,800.00* | *9,900.00* |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### இறப்பர் (தயர் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உ ற்பத்தித் தொழில்

இறப்பர் (தயர் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம், றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
இறப்பர் (தயர் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட)
பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள்
உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 10.

### அட்டவணை

இறப்பர் (தயர் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உ ற்பத்தி தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 14,831 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் "மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு" என்னும் தலையங்கத்தின் கீழ் காணப்படும் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

### II ஆம் பாகம்

மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் ரூ. ச | ஓரளவுதேர்ச்சி உடையோர் ரூ. ச | தேர்ச்சிபெற் றோர் ரூ. ச | தொழிற்பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுநர் ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,815.00 | 12,220.00 | 12,625.00 | 8,020.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,915.00 | 12,345.00 | 12,775.00 | 8,220.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,015.00 | 12,470.00 | 12,925.00 | 8,420.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,115.00 | 12,595.00 | 13,075.00 | 8,620.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,215.00 | 12,720.00 | 13,225.00 | |
| 6 ஆம் ஆண்டு | 12,315.00 | 12,845.00 | 13,375.00 | |
| 7 ஆம் ஆண்டு | 12,415.00 | 12,970.00 | 13,525.00 | |

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் ரூ. ச | ஓரளவு தேர்ச்சி உடையோர் ரூ. ச | தேர்ச்சிபெற் றோர் ரூ. ச | தொழிற்பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுநர் ரூ. ச |
|---|---|---|---|---|
| 8 ஆம் ஆண்டு | 12,515.00 | 13,095.00 | 13,675.00 | |
| 9 ஆம் ஆண்டு | 12,615.00 | 13,220.00 | 13,825.00 | |
| 10 ஆம் ஆண்டு | 12,715.00 | 13,345.00 | 13,975.00 | |
| 11 ஆம் ஆண்டு | 12,815.00 | 13,470.00 | 14,125.00 | |
| 12 ஆம் ஆண்டு | 12,915.00 | 13,595.00 | 14,275.00 | |
| 13 ஆம் ஆண்டு | 13,015.00 | 13,720.00 | 14,425.00 | |
| 14 ஆம் ஆண்டு | 13,115.00 | 13,845.00 | 14,575.00 | |
| 15 ஆம் ஆண்டு | 13,215.00 | 13,970.00 | 14,725.00 | |
| 16 ஆம் ஆண்டு | 13,315.00 | 14,095.00 | 14,875.00 | |
| 17 ஆம் ஆண்டு | 13,415.00 | 14,220.00 | 15,025.00 | |
| 18 ஆம் ஆண்டு | 13,515.00 | 14,345.00 | 15,175.00 | |
| 19 ஆம் ஆண்டு | 13,615.00 | 14,470.00 | 15,325.00 | |
| 20 ஆம் ஆண்டு | 13,715.00 | 14,595.00 | 15,475.00 | |
| 21 ஆம் ஆண்டு | 13,815.00 | 14,720.00 | 15,625.00 | |
| 22 ஆம் ஆண்டு | 13,915.00 | 14,845.00 | 15,775.00 | |
| 23 ஆம் ஆண்டு | 14,015.00 | 14,970.00 | 15,925.00 | |
| 24 ஆம் ஆண்டு | 14,115.00 | 15,095.00 | 16,075.00 | |
| 25 ஆம் ஆண்டு | 14,215.00 | 15,220.00 | 16,225.00 | |

3- 880/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபை**

கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையானது , (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அவ்வட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
கறுவாத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015,மாச்சு 11.

**அட்டவணை**

கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1959, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 11,732 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 1872/31 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**II ஆம் பாகம்**

I ஆம் நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளருக்கு இயைபுடைய நேரவேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் II ஆம் நிரலில் அவ்வேலையாளருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள வீதமாகும்.

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>கீழெல்லைச் சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| **நேர வீதங்கள் - ஒரு நாளைக்கு :** | |
| கிளைகள் வெட்டுதல், காண் வெட்டுதல், படி கட்டுதல், களைபிடுங்குதல், இலுக்குப்புல்லை அகற்றுதல், எல்லைகளை துப்பரவு செய்தல் | |
| வேலையாட்களுக்கு | 520.00 |
| **கறுவா உரித்தல் - ஒரு நாளைக்கு:** | |
| வேலையாட்களுக்கு | 550.00 |
| **துண்டு வீதம்** | |
| கிளை வெட்டுதல் - ஒரு ஹெக்டயருக்கு | 11,400.00 |
| காண் வெட்டுதல் - 18" x 18" கொண்ட 10 மீற்றர் காணுக்கு | 216.00 |
| வருடாந்தம் களை பிடுங்குதல் - ஒரு ஹெக்டயருக்கு | 10,200.00 |

3- 880/5

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**ஆதுலர் மனைத் தொழில்**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
ஆதுலர் மனைத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மார்ச்சு 11.

**அட்டவணை**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஆந் திகதிய 104 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 07 ஆந் திகதிய 1,800/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்கு பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

**பாகம் II**

**வேலையாளரின் வகுப்பு**

**தரம்** I

தலைமைத் தாதி, அப்போதிக்கரிமார்

**தரம்** II

வாகடகர், தாதிச் சகோதரி, ஆய்வுகூட தொழில்நுட்பவலர், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்,

**தரம்** III

(அ) தாதிமார், மருத்துவிச்சிமார், களஞ்சியக்காப்பாளர்
(ஆ) பயிற்சி பெறும் தாதிமார் : பயிற்சியின் 1 ஆம் ஆண்டு
பயிற்சியின் 2 ஆம் ஆண்டு
பயிற்சியின் 3 ஆம் ஆண்டு

**தரம்** IV

எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், வரவேற்பாளர்கள், தொலை பன்னி இயக்குநர்கள், காசாளர்கள்.

**தரம்** V

கவனிப்பாளர்கள், மருந்தகர்கள், அறுவை மருத்துவ மருந்துகட்டுநர்கள், உணவு மேலாளர், மேற்பார்வையாளர்கள், வாட்டு எழுதுவினைஞர்கள், உணவு பட்டியல் எழுதுவினைஞர்கள்

**தரம்** VI

ஓடலிமார், பியோன்மார், சமையற்காரர்கள், காவலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள்.

**தரம்** VII

துணியறைக் கவனிப்பாளர்கள், தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெருக்குநர்கள், சாப்பாட்டறைப் பையன்கள்.

'ஆண்டு' என்பது எவரேனும் பயிற்சி பெறும் தாதி தொடர்பாக, பன்னிரண்டு மாதங்கள் தொழிலில் ஈடுபடுத்தல் கொண்ட ஊழியமென கருதப்படுதல் வேண்டும்.

மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தரம் I ரூ. ச. | தரம் II ரூ. ச. | தரம் III (அ) ரூ. ச. | தரம் III (ஆ) ரூ. ச. | தரம் IV ரூ. ச. | தரம் V ரூ. ச. | தரம் VI ரூ. ச. | தரம் VII ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 13970.00 | 13,670.00 | 13,162.50 | 8,275.00 | 12,755.00 | 12,350.00 | 11,950.00 | 11,645.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,220.00 | 13,895.00 | 13,362.50 | 8,425.00 | 12,930.00 | 12,500.00 | 12,075.00 | 11,745.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,470.00 | 14,120.00 | 13,562.50 | 8,575.00 | 13,105.00 | 12,650.00 | 12,200.00 | 11,845.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,720.00 | 14,345.00 | 13,762.50 | | 13,280.00 | 12,800.00 | 12,325.00 | 11,945.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,970.00 | 14,570.00 | 13,962.50 | | 13,455.00 | 12,950.00 | 12,450.00 | 12,045.00 |
| 6 ஆம் ஆண்டு | 15,220.00 | 14,795.00 | 14,162.50 | | 13,630.00 | 13,100.00 | 12,575.00 | 12,145.00 |
| 7 ஆம் ஆண்டு | 15,470.00 | 15,020.00 | 14,362.50 | | 13,805.00 | 13,250.00 | 12,700.00 | 12,245.00 |
| 8 ஆம் ஆண்டு | 15,720.00 | 15,245.00 | 14,562.50 | | 13,980.00 | 13,400.00 | 12,825.00 | 12,345.00 |
| 9 ஆம் ஆண்டு | 15,970.00 | 15,470.00 | 14,762.50 | | 14,155.00 | 13,550.00 | 12,950.00 | 12,445.00 |
| 10 ஆம் ஆண்டு | 16,270.00 | 15,695.00 | 14,962.50 | | 14,330.00 | 13,700.00 | 13,075.00 | 12,545.00 |

3 - 880/6

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
மட்பாண்ட பொருட்கள் உற்பத்தித்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

**அட்டவணை**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையிலிருந்து பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

**தொழிலாளர் வகுப்பு**

**1. தேர்ச்சியுடையோர் :**

பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர், சார்ஜ் ஹேன்டர்ஸ் (charge handers) , போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுப்பவியலாளர்.

**2. ஓரளவு தேர்ச்சியுள்ளோர் :**

உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர் (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவுசெய்வோர், கனிஷ்ட மின்தூக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ்செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், ஷவல் லோடர் (shovel loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (oven) இயக்குநர்.

**3. தேர்ச்சியற்றோர் :**

சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள், இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.

**4. பயிலுநர்கள் :**

இரண்டு ஆண்டுகால பயிற்சி வரையறையின் கீழ் நானாவித துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

மாதமொன்றுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக் குறைந்த சம்பள அளவு

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் | ஓரளவு தேர்ச்சி திறனுள்ளோர் | தேர்ச்சித்திறன் அற்றோர் | பயிலுநர் |
|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 12,360.00 | 11,520.00 | 10,765.00 | 6,550.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,510.00 | 11,645.00 | 10,865.00 | 6,650.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,660.00 | 11,770.00 | 10,965.00 | |
| 4 ஆம் ஆண்டு | 12,810.00 | 11,895.00 | 11,065.00 | |
| 5 ஆம் ஆண்டு | 12,960.00 | 12,020.00 | 11,165.00 | |

3- 880/7

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**உணவுச்சாலைகள், உணவு வழங்கல் தொழில் தொடர்பான சம்பளச் சபை**

உணவுச்சாலைகள், உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வொரு ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
உணவுச்சாலைகள், உணவு வழங்கல்,
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

**அட்டவணை**

*உணவுச்சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியன்று வெளிவந்த 34 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாக பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள முடிபுகள், மேலும் பின்வருமாறு புதிய வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-*

*உணவுச்சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் II ஆம் பாகத்திலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்.*

***பாகம் I***

**வேலையாளர்களின் வகுப்பு :**

*தரம் I*

*உதவி அறைப் பையன்கள், தரிக்குமிடப் பரிசாரர், தரிக்குமிடப் பெண் உதவியாளர், படுக்கையறைத் தொழிலாளர்கள், சுத்தஞ் செய்வோர், ஓய்வறைத் தொழிலாளர்கள், படுக்கையறை (மலசலகூட)த் தொழிலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள், அலுவலகப் பையன், அலுவலகத் தொழிலாளர்கள், பண்டகசாலைத் தொழிலாளர்கள், சைக்கிள் ஏவலாளர், சமையலறை, சுத்தஞ் செய்வோர், சமையலறை உதவியாளர்கள், உண்கலம் கழுவுவோர், சமையலறைத் தொழிலாளர்கள், சுமையாள் போசணப் பதார்த்தசாலைப் பையன், உதவியாளர், கோப்பை அறைப் பையன், குவளை அறைப் பையன், மதுபானசாலைத் தொழிலாளர், பயன்பணி வேலையாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள்/உதவியாளர்கள், தேர்ச்சியற்ற பராமரிப்புத் தொழிலாளர்கள்.*

*தரம் II*

*அறைப் பையன்கள், மனைப் பணியாட்கள், அறைப்பணிப்பெண், துணியறைப் பரிசாரர், அறைப்பெண் உதவியாளர், சேகவர்கள், தூதுப் பணியாட்கள், சரிபார்ப்போர், பணியறைப் பையன்கள், குற்றேவல் பையன், மின்தூக்கிப் பையன், வாயிலோன், பயணப்பொதி மின்தூக்கி இயக்குநர்கள், பயணிகள், மின்தூக்கி இயக்குநர்கள், உதவி உணவு பரிமாறுபவர், உதவி பண்டகசாலை மேலாள், பஸ்வண்டிப் பையன், உதவி மதுபானச் சாலையாளர், உதவி மதுபானச்சாலை பணியாளர், பிலியட்ஸ் மார்க்கர், நீச்சல் தடாக உயிர்க்காப்பாளர், சலவைச்சாலை உதவியாளர், தோட்டக்காரன், நீச்சல் தடாகப்பரிசாரர், ஓரளவு தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர்.*

*தரம் III*

*தையற்பெண்கள் (சீம்ஸ்ட்ரெஸ்), தையற்காரர், உடம்பு பிடிப்போர், எழுதுவினைஞர் தரம் III, பண்டகசாலை உதவியாளர், சாரதிகள், மதுபான சாலைக் காசாளர்கள், சிட்டை எழுதுவினைஞர், பொது எழுதுவினைஞர், அந்தரங்க எழுதுவினைஞர், சிற்றுண்டிச்சாலைச் சமையற்காரர், தித்திப்புப் பண்டம் தயாரிப்பவர், உதவிச் சமையற்காரர், சமையலறை 3 - ஆம் உதவியாளர், உதவி பாண் தயாரிப்பாளர், போசனப் பதார்த்தசாலையாளர், சமையற்காரர் தரம் III உதவி மணித் தலைமையாள், மண்டபச் சுமையாள், உணவு பரிமாறுபவர், மதுபானசாலைப் பணியாளர், பண்டசாலை மேலாள், மதுபானசாலைப் பரிமாறுநர், மதுபான பண்டகசாலை மேலாள், பாதுகாப்புக் காவலாளர், தலைமைத் தோட்டக்காரன், தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர், மதுபானச்சாலையாளர்.*

*தரம் IV*

*சுகாதாரக் களரி வரவேற்பாளர், எழுதுவினைஞர் தரம் II, உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர், பண்டகசாலை எழுதுவினைஞர், உதவி இரவுக் கணக்காய்வாளர், நேரம் குறிப்போர், காடெக்ஸ் உதவியாளர், கணக்கு எழுதுவினைஞர், உதவி கணக்கு பதியுநர், செலவின எழுதுவினைஞர், வரவு எழுதுவினைஞர், விற்பனைப் பேரேட்டு எழுதுவினைஞர், சம்பள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், காசாளர் பொது உதவியாளர், தனியாள் உதவியாளர், உதவித் தலைமைச் சமையற்காரர், சமையலறை 2 - ஆம் உதவியாளர், பாண் தயாரிப்பவர், பிரிவு தலைமைச் சமையற்காரர், சமையற்காரர் தரம் II, தொலைபேசி இயக்குநர், வரவேற்பாளர், மணித்தலைமையாள், தலைமைச் சுமையாள், அறைச்சேவைக் கட்டளை பெறுவோர், உணவு மேடைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பொறுப்பாளர், தலைமை உணவு பரிமாறுபவர், தலைமைப் பண்டசாலை மேலாள், தலைமை விருந்தோம்பற் பெண், தலைமைப்போசனப் பதார்த்த சாலையாளர், தேநீர் தயாரிப்பவர், பாதுகாப்புத் தலைவர், சிரேஷ்ட சலவைச்சாலை உதவியாளர்.*

*தரம் V*

*நிலமேற்பார்வையாளர், துணியறை மேற்பார்வையாளர், தாதிமார், உதவி மனைப் பொறுப்பாளர், எழுதுவினைஞர் தரம் I, பண்டகசாலைப் பொறுப்பாளர், தலைமைக் கணக்கு எழுதுவினைஞர், சிறாப்பர், கணக்குப்பதிவாளர், இரவுக் கணக்காய்வாளர்,*

வருமானக் கணக்காய்வாளர், சுருக்கெழுத்தாளர், பிரதான எழுதுவினைஞர், பிரதான காசாளர், கணக்காய்வாளர், கொள்வனவு உதவியாளர், பிரதான நேரம் குறிப்பவர், சமையலறை மேலாள், மேற்பார்வையாளர், சமையலறை 1 - ஆம் உதவியாளர், தலைமைச் சமையற்காரர், மேல் நிலை சமையற்காரர், உண்டிச்சாலைச் சமையற்காரர், முன்னறை அலுவலக எழுதுவினைஞர், விமான நிலையப் பிரதிநிதி, தலைமை வரவேற்பாளர், பிரதான தொலைத் தட்டெழுத்து இயந்திர இயக்குநர், பிரதான தொலைபேசி இயக்குநர், ஒதுக்கீட்டு எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், குதிரையோட்டி முகாமையாளர் பாதுகாப்புப் பணிமுறை மாற்றத் தலைவர், தோட்ட மேற்பார்வையாளர், பொறியியல் பொறுப்புப் பணிப்பாளர், நீச்சல் தடாக மேற்பார்வையாளர்கள்.

**விளக்க அட்டவணை II**

**ஒரு மாதத்திற்கான கீழெல்லைச் சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூபா . ச. | தரம் II<br>ரூபா . ச. | தரம் III<br>ரூபா . ச. | தரம் IV<br>ரூபா . ச. | தரம் V<br>ரூபா . ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,590.00 | 12,095.00 | 12,600.00 | 13,105.00 | 13,610.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,690.00 | 12,220.00 | 12,750.00 | 13,280.00 | 13,810.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,790.00 | 12,345.00 | 12,900.00 | 13,455.00 | 14,010.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,890.00 | 12,470.00 | 13,050.00 | 13,630.00 | 14,210.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,990.00 | 12,595.00 | 13,200.00 | 13,805.00 | 14,410.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,090.00 | 12,720.00 | 13,350.00 | 13,980.00 | 14,610.00 |
| 7 ஆம் ஆண்டு | 12,190.00 | 12,845.00 | 13,500.00 | 14,155.00 | 14,810.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,290.00 | 12,970.00 | 13,650.00 | 14,330.00 | 15,010.00 |
| 9 ஆம் ஆண்டு | 12,390.00 | 13,095.00 | 13,800.00 | 14,505.00 | 15,210.00 |
| 10 ஆம் ஆண்டு | 12,490.00 | 13,220.00 | 13,950.00 | 14,680.00 | 15,410.00 |

3 - 880/8

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பத்திக் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ)ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு, 1979 ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆம் திகதிய 48 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் வாயிலாக வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி தொழில் ஆணையாளர் ஹேரத் யாப்பா ஆகிய நான், மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நேர வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் கூறப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள வீதங்களை நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

உத்தேச தீர்மானத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
பத்திக் தொழில் தொடர்பான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5.
2015, மார்ச்சு 11.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்டதும், 1979ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 64/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் கீழ் காணப்படும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும். பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு I வது நிரலில் குறிப்பிட்டுள்ள நேர வேலைக்கு உரித்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாதல் வேண்டும்:-

| "நிரல் I | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய சம்பள வீதம்<br>ரூபா. ச |
|---|---|
| (அ) சித்திரம் வரைவோர், வடிவுருவங்களமைப்போர் | 603.75 |
| (ஆ) வெள்ளாவியிடுவோர், சாயமிடுவோர் | 517.50 |
| (இ) இஸ்திரிக்கையிடுவோர், உருவப்பிரதி செய்வோர், மெழுகிடுவோர் | 474.50 |

**சாதாரண வேலை நாள்**

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | |
|---|---|
| (அ) சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள் |

3- 880/9

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பத்திரிகையாளர் தொழில்**

பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறிக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
பத்திரிகையாளர் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

**அட்டவணை**

பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிய 411/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிய 1800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான

தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

### பகுதி II

**விசேட தரம் :-** பிரதி பத்திரிகை ஆசிரியர், இணை பத்திரிகை ஆசிரியர், விசேட தரப்பத்திரிகை ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் (நாளாந்தம்).

**தரம் I** வியாபாரப் பதிப்பாசிரியர், பிரதான உப பதிப்பாசிரியர், எழுத்தாளர் தலைவர், வெளிநாட்டுச் செய்திப்பதிப்பாசிரியர், தனிச்சிறப்பு கூறு பதிப்பாசிரியர், உள்ளூர் செய்திப்பதிப்பாசிரியர், விளையாட்டுப் பகுதிப் பதிப்பாசியர், மகளிர் பகுதிப் பதிப்பாசிரியர், பதிப்பாசிரியர் (வாராந்தம்), புகைப்படப் பதிப்பாசிரியர்.

**தரம் : II** உதவிப் பதிப்பாசிரியர், பிரதான புகைப்படப்பிடிப்பாளர், பிரதி எழுத்தாளர் தலைவர், தனிச் சிறப்புக் கூறு எழுத்தாளர், ஆசிரியர் தலையங்க உதவியாளர், நூலக உப பதிப்பாசிரியர், கேலிச் சித்திரக்காரர், மொழிபெயர்ப்பாளர், சிரேட்ட புகைப்படப்பிடிப்பாளர், சித்திரம் வரைவோர்.

**தரம் : III** நூலக உதவியாளர், செய்தி அறிக்கையாளர், புகைப்படப்பிடிப்பாளர், கனிஷ்ட உபபதிப்பாளர், ஒப்புநோக்குநர்

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | விசேட தரம் ரூ. ச | தரம் I ரூ. ச | தரம் II ரூ. ச | தரம் III ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 22,080.00 | 18,570.00 | 17,555.00 | 16,735.00 |
| 2 ஆம் ஆண்டு | 22,430.00 | 18,870.00 | 17,805.00 | 16,935.00 |
| 3 ஆம் ஆண்டு | 22,780.00 | 19,170.00 | 18,055.00 | 17,135.00 |
| 4 ஆம் ஆண்டு | 23,130.00 | 19,470.00 | 18,305.00 | 17,335.00 |
| 5 ஆம் ஆண்டு | 23,480.00 | 19,770.00 | 18,555.00 | 17,535.00 |
| 6 ஆம் ஆண்டு | 23,830.00 | 20,070.00 | 18,805.00 | 17,735.00 |
| 7 ஆம் ஆண்டு | 24,180.00 | 20,370.00 | 19,055.00 | 17,935.00 |
| 8 ஆம் ஆண்டு | 24,530.00 | 20,670.00 | 19,305.00 | 18,135.00 |
| 9 ஆம் ஆண்டு | 24,880.00 | 20,970.00 | 19,555.00 | 18,335.00 |
| 10 ஆம் ஆண்டு | 25,230.00 | 21,270.00 | 19,805.00 | 18,535.00 |
| 11 ஆம் ஆண்டு | | 21,570.00 | 20,055.00 | 18,735.00 |
| 12 ஆம் ஆண்டு | | 21,870.00 | 20,305.00 | 18,935.00 |
| 13 ஆம் ஆண்டு | | 22,170.00 | 20,555.00 | 19,135.00 |
| 14 ஆம் ஆண்டு | | 22,470.00 | 20,805.00 | 19,335.00 |
| 15 ஆம் ஆண்டு | | 22,770.00 | 21,055.00 | 19,535.00 |

தரம் III இல் உள்ள பயிலுநர் - 1 ஆம் ஆண்டு ரூபா 11,960.00

3- 880/10

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தித் (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழில்**

விசுக்கோத்து,இனிப்பு வகைகள் உற்பத்தித் (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தி,
(சொக்லேற்று உற்பத்தி) தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

**அட்டவணை**

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 14806 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்கள், பின்வரும் புதிய பகுதியினை அவ் அட்டவணையின் பாகம் II இற்கு பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

**பகுதி II**

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) தொழிலில் ஈடுபட்டுள்ள கீழ்காட்டப்பட்டுள்ள வேலையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேரவேலைக்காக கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த மாதாந்த சம்பள அளவுகள் முறையே இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கும் உரிய வகையில் I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**''அ'' வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) :**

**(அ) விசுக்கோத்து உற்பத்தி :**

கலக்கும் தொட்டிகளையும் கொள்கலன்களைய் துப்பரவு செய்தல், சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும் அளத்தலும், இரசாயனப் பொருள்கள், சாரம் சாயம் ஆகியவற்றைக் கூட்டுதல், கலக்கு கருவிகளுக்கு ஊட்டுதல் என்பன உட்பட, பிசைந்த மாவைக் கலத்தல் தொடர்பான சேவைகள், வெட்டுபொறி தொடர்பான வேலை, வெட்டுதலும் புறஉரு அமைத்தலுமான தொடர்பாய செய்கைகள், கனல் அடுப்பில் இடுவோரினதும் கனல் அடுப்பு உதவியாளரினதும் வேலை உட்பட விசுக்கோத்து சுடுதல், அடுக்கு பொறி தொடர்பாய வேலைகள்.

**(ஆ) இனிப்பு வகை உற்பத்தி :**

சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல், "வெப்ப மேசைகளுக்கும்" அவற்றிலிருந்தும் "பாகுவை" அகற்றுதல் தொடர்பான வேலை, "சூடாற்று மேசைகளுக்கும்" அவற்றிலிருக்கும் பாகுவை அகற்றுதல் தொடர்பான வேலை "பாகுஊட்டி" தொடர்பான செய்கைகள், "பாகுவைத்" தடங்களிற் கொட்டுதல் தொடர்பான வேலை, "வெட்டிச் சுற்றும் பொறி" தொடர்பான வேலை " துண்டு செய்பொறி" தொடர்பான செய்கைகள் "இரவையாக்கு பொறி" தொடர்பான செய்கைகள், சாரம், சீனி சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைத்தாச்சிகள் தொடர்பான செய்கைகள், "புறஉரு அமைக்கும் பொறி" தொடர்பான செய்கைகள், "அரித்தற் பொறி" தொடர்பான வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, "மண்டி இறுக்கு பொறி" ஆகியன தொடர்பான வேலை, "அதிர்வு மேசை" "ஆற்று குழாய்" தொடர்பான வேலை.

"ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) :

**(அ) விசுக்கோத்து உற்பத்தி :**

மா, சீனி தாவரநெய், தாவரக் கொழுப்பு, பழ வெல்லம் லெசிற்றின் சாரவகை கொக்கோத்தூள் பாற்கட்டி, நீரில் ஊறியபின் உலர்ந்த தானியம், பால்மா இரசாயனப் பொருட்கள், வெண்ணெய் அமோனியா, அப்பச்சோடா, முட்டை மற்றும் சேர்ப்புத் திரவியங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதலும், பண்டகசாலையிலிமிருந்தும் தொடர்பாய வேலை, கலந்து பிசைந்த மாவைவெட்டும் மேசையில் பரவுதலும் விசுக்கோத்துத் தகரங்களையும் பொட்டலங்களையும் கலத்தலும் அடுக்குதலும் ஏற்றுதலும் இறக்குதலுடனும் தொடர்பாய வேலை, பொட்டலங்களையும் கலத்தலும் அடுக்குதலும் ஏற்றுதலும் இறக்குதலுடனும் தொடர்பாய வேலை பொட்டலமாக்குதலும் சூட்டினால் முத்தரையிடலும் நாமவிலாசம் ஒட்டுதலும், பெட்டிகளில் அடைத்தலும் அட்டைப் பெட்டிகளை ஒட்டுதலும்.

***(ஆ) இனிப்பு உற்பத்தி*** :

*பழவெல்லம், சீனி சார்வகை, கொக்கோ விதைகள், பால் மா, தாவர வெண்ணெய், ஊன்பசை* (Gelatin), *இரசாயனப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் உட்பட்ட சேர்ப்புத் திரவியங்களை ஏற்றுக் கொள்ளுதல், பண்டகசாலையிடுதலும் தொடர்பான வேலை, சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும், அளத்தலும், கலத்தலும், ரொபி, சொக்கிலேற்று, தித்திப்புப் பண்டங்கள் ஆகியவற்றை நிறுத்தலும், பொட்டல மாக்குதலும், தித்திப்புப் பண்டங்களைத் தட்டங்களிற் சேர்த்தலும், வெப்ப அறையில் தித்திப்புப் பண்டங்களை உலர்த்தலும், ஊன்பசையும், சாயப் பொருளும் இடுதல், ஜுஜுப்புகளை தட்டங்களிற் சேர்த்தல், ஜுஜுப்புகளை நிறுத்தலும் பொட்டலமாக்குதலும், தித்திப்பு பண்டங்களையும், சொக்கிலேற்றையும் காகிதத்திற் சுற்றுதலும், நாம விலாசம் ஒட்டுதலும், பொட்டலமாக்குதலும், மிட்டாய் உற்பத்தி தொடர்பான அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவ்வாறாயினும்.*

*“இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) :*

***(அ) விசுக்கோத்து உற்பத்தி*** :

*பிசைந்த மாவைப் பிரித்தல் தொடர்பான செய்கைகளை, சூடாற்று பரண்களுக்கும் கழுவுதலும் துப்பரவு செய்தலும், வெட்டிய விசுக்கோத்துக்களைச் சேர்த்தலும் அடுக்குதலும், விசுக்கோத்து உற்பத்தி தொடர்பான அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் எவ்வாறாயினும்,*

***(ஆ) இனிப்பு வகை உற்பத்தி*** :

*தித்திப்புப் பண்டங்கள், சொக்கிலேற்றுகள், ரொபிகள் என்பவற்றைத் தரம் பிரித்தல், பைகளுக்கு முத்திரை யச்சிடுதல், சொக்கிலேற்று அச்சுகளை நிரப்புதல், சொக்கிலேற்றை அச்சுகளிலிருந்து அகற்றுதல்.*

***விளக்க அட்டவணை I***

*இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகள்*

*மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்*

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச. | 2 ஆம் வகுப்பு ரூ. ச. | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5ஆம் வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| “அ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,045.00 | 13,195.00 | 13,345.00 | 13,495.00 | 13,645.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,045.00 | 13,195.00 | 13,345.00 | 13,495.00 | 13,645.00 |
| “ஆ” வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 12,545.00 | 12,670.00 | 12,795.00 | 12,920.00 | 13,045.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 12,545.00 | 12,670.00 | 12,795.00 | 12,920.00 | 13,045.00 |
| “இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 12,045.00 | 12,145.00 | 12,245.00 | 12,345.00 | 12,445.00 |
| (ஆ) இனிப்பு வகைஉற்பத்தி | 12,045.00 | 12,145.00 | 12,245.00 | 12,345.00 | 12,445.00 |

***விளக்க அட்டவணை II***

*இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகள்*

*மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்*

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச. | 2 ஆம் வகுப்பு ரூ. ச. | 3 ஆம் வகுப்பு ரூ. ச. | 4 ஆம் வகுப்பு ரூ. ச. | 5ஆம் வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| "அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 12,495.00 | 12,645.00 | 12,795.00 | 12,945.00 | 13,095.00 |
| (i) இனிப்பு வகை உற்பத்தி | 12,495.00 | 12,645.00 | 12,795.00 | 12,945.00 | 13,095.00 |
| "ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 11,995.00 | 12,120.00 | 12,245.00 | 12,370.00 | 12,495.00 |
| (i) இனிப்பு வகை உற்பத்தி | 11,995.00 | 12,120.00 | 12,245.00 | 12,370.00 | 12,495.00 |
| "இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 11,495.00 | 11,595.00 | 11,695.00 | 11,795.00 | 11,895.00 |
| (i) இனிப்பு வகை உற்பத்தி | 11,495.00 | 11,595.00 | 11,695.00 | 11,795.00 | 11,895.00 |

*3-880/11*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**மேசு வகை உற்பத்தித் தொழில்**

*மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

ஹேரத் யாப்பா,
தலைவர்,
மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

### அட்டவணை

மேசுவகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 14725 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிய 1,800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான தீர்மானங்கள் அட்டவணையில் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

### *பகுதி II*

ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பளம்

*தொழிலாளர் வகுப்பு :*

**தரம்** I : பிரதான வேலையாளர் அல்லது தலைவர்கள் பிரிவு மேற்பார்வையாளர் படனம் அடுக்கும் இயந்திரம் இயக்குவோர்.

**தரம்** II : வெள்ளாவித் தொட்டி இயக்குவோர், நீராவிக்கொதிகலமியக்குவோர், கழுவு இயந்திரம் இயக்குவோர், நிறமூட்டும் இயந்திரம் இயக்குவோர், நீரகற்றும் இயந்திரம் இயக்குவோர், மெருகிடும் இயந்திரம் இயக்குவோர், உலர்த்தும் இயந்திரம் இயக்குவோர், இயந்திரம் திருத்துவோர் நுட்பவியலாளர் (பொது நோக்கு) சாயமூட்டுவோர் (ஆண்கள்) பின்னும் இயந்திரம் திருத்துவோர்கள், திரை அச்சிடுவோர், திரை அச்சிடுபொறி வேலையாளர் (பெண்கள்) திரை அச்சீட்டு உதவியாளர், தையல் இயந்திரம் திருத்துவோர்.

**தரம்** III : சீத்தை படலம் இயக்குவோர் (பெண்கள்) வெட்டும் இயந்திரம் இயக்குவோர், மின்சக்தியால் வெட்டும் இயந்திரம் இயக்குவோர் (கையினால்) வெட்டுவோர், தையல் இயந்திரம் இயக்குவோர், சீத்தை கொதிக்கவைக்கும் தொழிலாளர்கள், வெளிறச் செய்யும் வேலையாளர்கள் (ஆண்கள்), பின்னல் இயந்திரம் இயக்குவோர், சீர்ப்படுத்தும் வேலையாளர்கள் (பெண்கள்) நேர்த்தியாக்கும் வேலையாளர்கள் (பெண்கள்) இஸ்திரிகை போடுவோர் (ஆண்கள்) மின்சக்தியால் இஸ்திரிகை போடுவோர், சரிபார்ப்போர் (பெண்கள்), வகைப்படுத்துவோர் (பெண்கள்), கட்டாக்குவோர், கட்டாக்கி முத்திரை அச்சிடுவோர் (பெண்கள்), சப்பாத்து நாடா, பின்னல் கயிறு, பின்னல் நாடா இயந்திரம் இயக்குவோர், செல்பேன்பைகளும் அட்டைப்பெட்டிகளும் செய்வோர், சுற்றுமியந்திரம் இயக்குவோர்.

**தரம்** IV : தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் (மேலே குறிக்கப்பட்ட எவராயினும் ஒரு தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் சம்பந்தப்பட்ட வரையில் வேலை பழகும் காலம் 156 வேலை நாட்களைக் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும்).

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பளம்**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச | தரம் II<br>ரூ. ச | தரம் III<br>ரூ. ச | தரம் IV<br>ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,700.00 | 11,230.00 | 10,765.00 | 6,760.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,850.00 | 11,355.00 | 10,865.00 | |
| 3 ஆம் ஆண்டு | 12,000.00 | 11,480.00 | 10,965.00 | |
| 4 ஆம் ஆண்டு | 12,150.00 | 11,605.00 | 11,065.00 | |
| 5 ஆம் ஆண்டு | 12,300.00 | 11,730.00 | 11,165.00 | |

3- 880/12

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

### அட்டவணை

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11605 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 1803/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவாறானவையும் தீர்மானங்கள், கீழே காட்டப்பட்டுள்ளவாறு அட்டவணையின் நிரல் II க்குப் பதிலாகப் பின்வரும் புதிய நிரலினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்:-

### II ஆம் பாகம்

**மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | "ஏ" வகுப்பு | "பீ" வகுப்பு | "சீ" வகுப்பு |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,215.00 | 11,310.00 | 10,405.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,365.00 | 11,435.00 | 10,505.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,515.00 | 11,560.00 | 10,605.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,665.00 | 11,685.00 | 10,705.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,815.00 | 11,810.00 | 10,805.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,965.00 | 11,935.00 | 10,905.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,115.00 | 12,060.00 | 11,005.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,265.00 | 12,185.00 | 11,105.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,415.00 | 12,310.00 | 11,205.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,565.00 | 12,435.00 | 11,305.00 |
| 11 ஆம் ஆண்டு | 13,715.00 | 12,560.00 | 11,405.00 |

3 - 880/13

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

***திரைப்படத் தொழில்***

*திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்து வைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிவுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

ஹேரத் யாப்பா,
*தலைவர்,*
*திரைப்படத் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
*2015, மாச்சு 11.*

***அட்டவணை***

*திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் செய்யப்பட்டவையும் 1949ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதிய 9,961 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் I ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-*

***பகுதி I***

*திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் சேவையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேர வேலைக்கான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பள அளவு முறையே மாநகரசபை எல்லைக்குட்பட்ட திரைப்படக் கூடங்கள், மாநகர சபை எல்லைக்குட்படாத திரைப்படக்கூடங்களுக்குரிய வகையில் முறையே I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

***ஊழியர் வகுப்பு :***

*(அ) எழுதுவினைஞர் தரமல்லாத :*

தேர்ச்சியற்றோர் :

விளம்பர வண்டியிழுப்போர், விளம்பர அல்லது சுவரொட்டிப் பையன், குளியல் அறைப் பையன், கார் அல்லது சைக்கிள் நிறுத்திட ஏவலாள், சொக்களேற் பையன், துப்புரவு செய்பவர், உடுதுணியறைப் பையன், மலசலகூடத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, வாசல் காப்போன், மண்டப பையன், சேவகர், சான்ட்விச் பையன், மென்பானம் வைத்திருப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளி, இருக்கை காட்டும் பெண் பணியாளர், உணவு விடுதி மேசைப் பணியாளர், காவலாளர் (பகல்), காவலாளர் (இரவு).

ஓரளவுத் தேர்ச்சியுள்ளோர்

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், உதவி எஞ்சின் ஓட்டுனர், சரிபார்ப்பவர், சமையற்காரர் தரம் II (கீழ்நிலை), மீளச் சுற்றுபவர், தொலைபேசி இயக்குநர், மூன்றாவது உதவி இயக்குநர்.

தேர்ச்சியுள்ளோர் தரம் II

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், தச்சர், சமையற்காரர் தரம் I உயர்நிலை, மின்சாரத் தொழிலாளர் தரம் II, திரைப்படச்சுருள் பழுது பார்ப்பவர் தரம் II, கட்புல, செவிப்புல இணைப்பு எந்திர இயக்குநர், இரண்டாவது உதவி இயக்குநர், மேற்பார்வையாளர் அல்லது தலைமை சரிபார்ப்போர், கூடாரத் தலைவர், மின்கம்பியாளர், தீயணைப்பாளர்.

தேர்ச்சியுள்ளோர் தரம் I

ஆமேச்சர் சுற்றுபவர், மின்சாரத் தொழிலாளர் தரம் I, எஞ்சின் ஓட்டுநர், திரைப்படச் சுருள் அறை பழுதுபார்ப்பவர் தரம் I, தலைமை இயக்குநர், கூடாரம் கட்டுபவர்.

(ஆ) எழுதுவினைஞர் - தரம் III

விளம்பர எழுதுவினைஞர், உதவிக் காசாளர் எழுதுவினைஞர் (அனுப்புதல்), நீக்கற் பொறுப்பு எழுதுவினைஞர், சீட்டு முற்பதிவு எழுதுவினைஞர், சீட்டு எழுதுவினைஞர்.

தரம் II

விளம்பர முகாமையாளர், காசாளர் எழுதுவினைஞர், எழுதுவினைஞர் (கணக்குகளும் பொதுவும்), தட்டெழுத்தாளர், சரக்கு மேசை எழுதுவினைஞர், களஞ்சியப் பொருட்காப்பாளர், கணக்குப் பதிவாளர்.

தரம் I

பிரதம எழுதுவினைஞர்

ஏனையோர்

முகாமையாளர்

உதவி முகாமையாளர்

## அட்டவணை I

(மாநகர எல்லைக்குள்)

**ஒரு மாதத்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| | ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| வேலையாளர்களின் வகுப்பு | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) எழுதுவினைஞர் | | | | | |
| தரமல்லாத தேர்ச்சியற்றோர் | 10,177.50 | 10,277.50 | 10,377.50 | 10,477.50 | 10,577.50 |
| ஓரளவு தேர்ச்சியுள்ளோர் | 10,605.00 | 10,730.00 | 10,855.00 | 10,980.00 | 11,105.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 11,200.00 | 11,350.00 | 11,500.00 | 11,650.00 | 11,800.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 12,220.00 | 12,395.00 | 12,570.00 | 12,745.00 | 12,920.00 |
| (ஆ) எழுதுவினைஞர் | | | | | |
| தரம் III | 10,605.00 | 10,730.00 | 10,855.00 | 10,980.00 | 11,105.00 |
| தரம் II | 11,165.50 | 11,315.00 | 11,465.00 | 11,615.00 | 11,765.00 |
| தரம் I | 11,875.00 | 12,050.00 | 12,225.00 | 12,400.00 | 12,575.00 |
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 12,640.00 | 12,815.00 | 12,990.00 | 13,165.00 | 13,340.00 |
| உதவி முகாமையாளர் | 11,040.00 | 11,190.00 | 11,340.00 | 11,490.00 | 11,640.00 |

## அட்டவணை II

(மாநகர எல்லைக்கு வெளியே)

ஒரு மாதத்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்

| | ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| வேலையாளர்களின் வகுப்பு | 1ஆம் ஆண்டு ரூ. ச. | 2ஆம் ஆண்டு ரூ. ச. | 3ஆம் ஆண்டு ரூ. ச. | 4ஆம் ஆண்டு ரூ. ச. | 5ஆம் ஆண்டு ரூ. ச. |
| (அ) எழுதுவினைஞர் | | | | | |
| தரமல்லாத தேர்ச்சியற்றோர் | 10,265.00 | 10,365.00 | 10,465.00 | 10,565.00 | 10,665.00 |
| ஓரளவுத் தேர்ச்சியுள்ளோர் | 10,690.00 | 10,815.00 | 10,940.00 | 11,065.00 | 11,190.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 11,280.00 | 11,430.00 | 11,580.00 | 11,730.00 | 11,880.00 |

| | ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| வேலையாளர்களின் வகுப்பு | 1 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 2 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 3 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 4 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 5 ஆம் ஆண்டு<br>ரூ. ச. |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 12,300.00 | 12,475.00 | 12,650.00 | 12,825.00 | 13,000.00 |
| (ஆ) எழுதுவினைஞர் | | | | | |
| தரமல்லாத தேர்ச்சியற்றோர் | 10,690.00 | 10,815.00 | 10,940.00 | 11,065.00 | 11,190.00 |
| ஓரளவு தேர்ச்சியுள்ளோர் | 10,690.00 | 10,840.00 | 10,990.00 | 11,140.00 | 11,290.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 11,655.00 | 11,830.00 | 12,005.00 | 12,180.00 | 12,355.00 |
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 12,425.00 | 12,600.00 | 12,775.00 | 12,950.00 | 13,125.00 |
| உதவி முகாமையாளர் | 10,780.00 | 10,930.00 | 11,080.00 | 11,230.00 | 11,380.00 |

3- 880/ 14

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தெங்கு வளர்த்தல் தொழில்

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2015,மாச்சு 11.

### அட்டவணை

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 1838/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான தீர்மானங்கள் , பின்வருமாறு மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

*1. அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் வேலையாட்களுக்கு ஏற்புடையதான துண்டு வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் பின்வருமாறமைதல் வேண்டும் :-*

| | நடைமுறை | | | வீதம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| (i) | பெருந்தோட்டப் பயிர்களை வளர்ப்பதிலும் பேணுவதிலும் தேங்காய்களைப் பறித்தல் | - | 1000 மரங்களுக்கு | 1950.00 |
| (ii) | கொப்பறாவை உற்பத்தி செய்வதில் தேங்காய்களை உரித்தல், உடைத்தல், கொப்பறா பதனிடலும் வேறாக்கலும் | - | 1000 தேங்காய்களுக்கு | 572.00 |

## *பகுதி III*

**2. நடைமுறை :**

(அ) தெங்குப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினை வளர்த்தலும் பேணுதலும்
(ஆ) கொப்பறாவினை உற்பத்தி செய்தல்

மேற்படி நடைமுறைக்கேற்ப நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறமைய வேண்டும்:-

| | | | ரூபா சதம் |
|---|---|---|---|
| தொழிலாளி ஒருவருக்கு (ஆண்/பெண்) | - | நாளொன்றுக்கு | 490.00 |

***சாதாரண வேலை நாள் ஒன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆகக் குறைந்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்கு, ஞாயிற்றுக்கிழமையில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தற் தொழிலாளிக்காயினும் இப்பகுதியில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறுபடாத வகையில் வழங்கப்படுத்தல் வேண்டும்.***

## *பகுதி III 'அ'*

3 . (அ) நடத்துநர் ஒருவரின் வேலைக்கு
(ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு

**உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் :**

| | ஏக்கர் அளவு | | காவலாளி ரூபா சதம் | நடத்துநர் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| (1) | பரப்பளவில் 10 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 25 ஏக்கருக்குக் குறைந்த தென்னந் தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 11,232.50 | ஏற்புடையதன்று |
| (2) | பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 50 ஏக்கருக்குக் குறைந்த ஏதேனும் தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | - | 11,722.50 | 12,050.00 |
| (3) | பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந் தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | - | 13,435.00 | 13,760.00 |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**ஆடைகள் உற்பத்தித் தொழில்**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஹேரத் யாப்பா,
தலைவர்,
ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2015, மாச்சு 11.

### அட்டவணை

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி 14688 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :-

### பகுதி II

ஒரு மாதத்திற்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

**தொழிலாளர்கள் வகுப்பு**

தரம் I (அ) வடிவமைப்போர், தையலாளர்கள், வடிவம் துளையிடுவோர், டிஸ்கெற் தயாரிப்போர் ;

(ஆ) தலைவர்கள் அல்லது பகுதி மேற்பார்வையாளர்கள்

தரம் II துணி வெட்டுவோர், கையால் துணிவெட்டுவோர், இயந்திரம் பழுதுபார்ப்போர்,

தரம் III சரிபார்ப்போர், தரம் பிரிப்போர், துணி அழுத்துவோர் (ஆண்கள்), சில்லறை வேலை செய்வோர் (பெண்கள்) பெயர் முத்திரையிடுவோர் (பெண்கள்), துணி அழுத்துவோர் (பெண்கள்), தையல் இயந்திரம் இயக்குவோர், மின் அழுத்தி இயக்குநர்கள், வழங்கும் தொழிலாளர்கள் (பெண்கள்), சித்திர வேலைப்பாடு இயந்திரத்தினால்/ கையால் செய்வோர்.

தரம் IV துணி விரிக்கும் ஆண்கள், துணி விரிக்கும் பெண்கள், பொதியிடுவோர், செலபின் பைகளும், அட்டைப் பெட்டிகளும் தயாரிப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், களஞ்சியத் தொழிலாளர்கள்.

**தரம் V பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் ;**

பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் தொழில் பயிற்சியாளர் அல்லது பயிலுநர் தொடர்பான பயிற்சிக்காலம் 156 வேலை நாட்களைக் கொண்டமைந்ததாகக் கருதப்பட வேண்டும்.

**சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | வேலை வகுப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தரம் I அ<br>ரூ. ச. | தரம் I ஆ<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 12,110.00 | 11,660.00 | 10,495.00 | 10,435.00 | 9,920.00 | 6,555.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,310.00 | 11,835.00 | 10,645.00 | 10,560.00 | 10,020.00 | |
| 3 ஆம் ஆண்டு | 12,510.00 | 12,010.00 | 10,795.00 | 10,685.00 | 10,120.00 | |
| 4 ஆம் ஆண்டு | 12,710.00 | 12,185.00 | 10,945.00 | 10,810.00 | 10,220.00 | |
| 5 ஆம் ஆண்டு | 12,910.00 | 12,360.00 | 11,095.00 | 10,935.00 | 10,320.00 | |

3 - 880/16

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.